வகுப்பு - 10

# இயல் - 1

## கற்கண்டு

## எழுத்து, சொல்

### குறுவினா

**I. சான்று தருக.**

1. உயர்திணை

அ. கணபதி ஆ. நாற்காலி இ. வானம் ஈ. பூமி

2. அஃறிணை

அ. மரம் ஆ. தேவர் இ. கந்தன் ஈ. கலா

3. ஆண்பால்

அ. கமலி ஆ. மாதவன் இ. மாதவி ஈ. பிரியா

4. பெண்பால்

அ. தாத்தன் ஆ. சிவா இ. தேவன் ஈ. நிலா

5. பலர்பால்

அ. மக்கள் ஆ. நாற்காலிகள் இ. பூக்கள் ஈ. சுப்பன்

6. ஒன்றன்பால்

அ. பசு ஆ. வெண்ணிலா இ. சூர்யா ஈ. சிந்து

7. பலவின்பால்

அ. சித்ரா ஆ. பைகள் இ. மதன் ஈ. தட்டு

8. தன்மை

அ. நான், நாம், நாங்கள் ஆ. நீ, நீங்கள், நீவிர்

இ. அது, அவை ஈ. இவை மூன்றும் அல்ல

9. முன்னிலை

அ. இது, இங்கு, இவை ஆ. நான் , நாம், நாங்கள்

இ. நீ, நீங்கள், நீவிர் ஈ. அது, அவை, அவர்கள்

10. படர்க்கை

அ. நான் , நாம், நாங்கள் ஆ. நீ, நீங்கள், நீவிர்

இ. இது, இங்கு, இவை ஈ. இவை மூன்றும் அல்ல

11. பொதுமொழி

அ. கண்ணன் வந்தான் ஆ. வேங்கை

இ. படி ஈ. கண்ணன்

12. தொழிற்பெயர்

அ. நட ஆ. நடத்திய இ. நடந்து ஈ. நடத்தல்

13. முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்

அ. சுடு ஆ. சூடு இ. சுடுதல் ஈ. சுட்டவன்

14. தொடர்மொழி

அ. ஆடு மேய்ந்தது ஆ. அருகில்

இ. அம்மா ஈ. அசையாமை

15. இன்னிசை அளபெடை

அ. உரனசைஇ ஆ. கெடுப்பதூஉம்

இ. உறாஅர்க்கு ஈ. தொழாஅர்

16. எதிர்மறைத் தொழிற்பெயர்

அ. நடத்தல் ஆ. நடவாமை இ. நடந்து ஈ. நடந்த

17. வினையாலணையும் பெயர்

அ. பாடியவள் ஆ. பாடினாள் இ.பாடுதல் ஈ. கண்ணன்

18. தொழிற்பெயர்

அ. ஈதல் ஆ. ஈ இ. ஈந்தான் ஈ. ஈந்து

19. தொடர்மொழி

அ. கண்ணன் ஆ. மலர் வீட்டுக்குச் சென்றாள்

இ. எட்டு ஈ. ஓடு

20. தனிமொழி

அ. படித்தான் ஆ. சுவைத்தேன்

இ. சுவையான தேன் ஈ. பலகை

21. சொல்லிசை அளபெடை

அ. வரனசைஇ ஆ. ஓஒதல் இ. எடுப்பதூஉம் ஈ. படாஅ

22. செய்யுளிசை அளபெடை

அ. ஆஅளிய ஆ. உடுப்பதூம் இ. உரனசைஇ ஈ. கெடுப்பதூஉம்

## II. நிரப்புக:

1. சார்பெழுத்து ____________ வகைப்படும் .

அ. எட்டு ஆ. பத்து இ.ஒன்பது ஈ. ஆறு

2. அளபெடை ____________ வகைப்படும்.

அ. இரண்டு ஆ. மூன்று இ. நான்கு ஈ. ஐந்து

3. அளபெடை என்பது ____________.

அ. எழுத்துகள் குறுகி ஒலித்தல் ஆ. எழுத்துகள் நீண்டு ஒலித்தல்

இ. எழுத்துகள் இயல்பாய் ஒலித்தல் ஈ. மாத்திரை குறைதல்

4. உயிரளபெடை ____________ வகைப்படும்.

அ. ஆறு ஆ. இரண்டு இ. மூன்று ஈ. நான்கு

5. செய்யுளிசைஅளபெடையின் வேறுபெயர் ____________.

அ. உயிரளபெடை ஆ. இன்னிசை அளபெடை

இ. இசைநிறை அளபெடை ஈ. சொல்லிசைஅளபெடை

6. செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் அளபெடுப்பது ____________.

அ. ஒற்றளபெடை ஆ. இன்னிசை அளபெடை

இ. சொல்லிசைஅளபெடை ஈ. செய்யுளிசைஅளபெடை

7. செய்யுளில் ஓசை குறையும் போது அதனை நிறைவு செய்ய நெட்டெழுத்துகள் அளபெடுப்பது ____________.

அ. ஒற்றளபெடை ஆ, இசைநிறை அளபெடை

இ. இன்னிசை அளபெடை ஈ. சொல்லிசை அளபெடை

8. செய்யுளில் ஒரு பெயர்ச்சொல் எச்சச்சொல்லாக திரிந்து அளபெடுப்பது ____________.

அ. ஒற்றளபெடை ஆ. செய்யுளிசை அளபெடை

இ. சொல்லிசை அளபெடை ஈ. இன்னிசை அளபெடை

9. ஒற்றளபெடையில் அளபெடுக்கும் மெய்யெழுத்துகள் ____________

அ. மெல்லின மெய்கள் வ், ய், ல், ள் ஆ. வல்லின மெல்லின மெய்கள்

இ. மெல்லினமெய்கள் மட்டும் ஈ. ஆய்த எழுத்து மட்டும்

10. ‘ஓஒதல் வேண்டும்’ என்பது ____________ அளபெடையாகும்.

அ. செய்யுளிசை அளபெடை ஆ. சொல்லிசை அளபெடை

இ. இன்னிசை அளபெடை ஈ. ஒற்றளபெடை

11. மொழி ____________ வகைப்படும்.

அ. இரண்டு ஆ. மூன்று இ. நான்கு ஈ. ஐந்து

12. ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருமாயின் அது ____________ எனப்படும்.

அ. தனிமொழி ஆ. தொடர் மொழி இ. பொதுமொழி ஈ. கிளைமொழி

13. பூ மலர்ந்தது ____________ மொழி.

அ. தனிமொழி ஆ. தொடர் மொழி இ. பொதுமொழி ஈ. அடுக்குத்தொடர்

14. ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும், அச்சொல்லே பிரிந்து நின்று வேறு பொருளையும் தருவது____________.

அ. பொதுமொழி ஆ. தனிமொழி இ. தொடர் மொழி ஈ. கிளைமொழி

15. எட்டு என்னும் சொல் பொதுமொழி ஆகும்போது ____________ஆகப்பிரியும்

அ. எள் + து ஆ. எட் + டு இ. எள் +டு ஈ. எட்டு + உ

16. வேங்கை என்னும் சொல் பொதுமொழி ஆகும்போது ____________ ஆகப்பிரியும்

அ, வேங் + கை ஆ. வேங் கு + கை இ. வேம் +கை ஈ. வேம் + ஐ

17. ஒரு வினை அல்லது செயலைக் குறிக்கும் பெயரானது எண், இடம், காலம், பால் ஆகியவற்றைக் குறிப்பாகவோ, வெளிப்படையாகவோ உணர்த்தாமல் வருவது ____________எனப்படும்,

அ. தொழிற்பெயர் ஆ, வினைமுற்று

இ. வினையாலணையும் பெயர் ஈ. வேற்றுமைத்தொடர்

18. வினையடியுடன் விகுதி சேர்வதால் உருவாகும் தொழிற்பெயர் ____________ஆகும்.

அ. எதிர்மறைத் தொழிற்பெயர் ஆ. முதனிலைத் தொழிற்பெயர்

இ. முதனிலை திரிந்த தொழிற்பெயர் ஈ. விகுதி பெற்ற தொழிற்பெயர்

19. விகுதி பெறாமல் வினைப்பகுதியே தொழிற்பெயராதல் ____________ஆகும்.

அ. எதிர்மறைத் தொழிற்பெயர் ஆ. முதனிலைத் தொழிற்பெயர்

இ. விகுதி பெற்ற தொழிற்பெயர் ஈ. முதனிலை திரிந்த தொழிற்பெயர்

20. விகுதி பெறாமல் முதனிலை திரிந்து வருவது ____________ ஆகும்.

அ. விகுதி பெற்ற தொழிற்பெயர் ஆ. எதிர்மறைத் தொழிற்பெயர்

இ. முதனிலைத் தொழிற்பெயர் ஈ. முதனிலை திரிந்த தொழிற்பெயர்

21. ஒரு வினைமுற்று பெயரின் தன்மையை அடைந்து வேற்றுமை உருபு ஏற்றும் ஏற்காமலும் வேறொரு பயனிலையைக் கொண்டு முடிவது ____________ எனப்படும்.

அ. வினைமுற்று ஆ, வினையாலணையும் பெயர்

இ. தொழிற்பெயர் ஈ. இடப்பெயர்

22. நடவாமை என்பது ____________ பெயர்.

அ. வினையாலணையும் பெயர் ஆ. எதிர்மறைத் தொழிற்பெயர்

இ. காலப்பெயர் ஈ. பொருட்பெயர்

23. தொழிலைச் செய்யும் கர்த்தாவைக் குறிப்பது.

அ. தொழிற்பெயர் ஆ. முதனிலை திரிந்த தொழிற்பெயர்

இ. முதனிலைத் தொழிற்பெயர் ஈ. வினையாலணையும் பெயர்

24. கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறவரை அழைத்து வாருங்கள் - இத்தொடர்

அ. வினாத்தொடர் ஆ. தனித்தொடர்

இ. செய்தித்தொடர் ஈ. கலவைத்தொடர்

25. வெஃஃகுவார்க்கில்லை, உரனசைஇ - இச்சொற்களில் உள்ள அளபெடைகள்

அ. ஒற்றளபெடை, சொல்லிசை அளபெடை

ஆ. இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை

இ. சொல்லிசை அளபெடை, ஒற்றளபெடை

ஈ. ஒற்றளபெடை, இன்னிசை அளபெடை

## III. கூறியவாறு செய்க. :

1. கெடுவான் கேடு நினைப்பான் (முதனிலைத் திரிந்த தொழிற்பெயரை எடுத்து எழுதுக

அ. கெடு ஆ. நினை இ. கேடு ஈ. வான்

2. படா - (செய்யுளிசை அளபெடையாக்குக)

அ, படாட ஆ. படாஅ இ. படாடா ஈ. பஅடா

3. நட - (தொழிற்பெயராக்குக)

அ. நடந்த ஆ. நடத்தல் இ. நடந்து ஈ. நடந்தான்

4. பொறு – (வினையாலணையும் பெயராக்குக)

அ. பொறுத்தல் ஆ. பொறுமை இ. பொறுத்த ஈ. பொறுத்தவர்

5. அடித்தல் – (வேர்ச்சொல் தருக)

அ. அடித்த ஆ. அடி இ. அடித்து ஈ. அடிப்பது

6. தொழாஅர் (அளபெடை நீக்கு)

அ. தொழாஅர் ஆ. தொழார் இ. தொழா ஈ. தொழாஅ

7. அளபெடை (பிரித்து எழுதுக)

அ. அளபு + எடை ஆ. அளப்பு + எடை

இ. அள + பெடை அள + ப் + பெடை

8. உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் (அளபெடையின் வகை கூறுக)

அ. இன்னிசை அளபெடை ஆ. சொல்லிசை அளபெடை

இ. செய்யுளிசை அளபெடை ஈ. ஒற்றளபெடை

9. எங்ங்கு ( எவ்வகை ஒற்றளபெடை என கூறுக,)

அ. குறில் கீழ் கடை ஆ. குறில் கீழ் இடை

இ. குறலிணை இடை ஆய்தம் ஈ. குறலிணை கடை ஆய்தம்

10. பாடல் (தொழிற்பெயர் விகுதியை எழுதுக)

அ. அல் ஆ. தல் இ. ல் ஈ. ஆடு


Created by Pinkz

*11. கண் (தொடர் மொழியாக்குக)*

அ. கண்ணன் வந்தான் ஆ. கண்

இ. மலர் ஈ. வாழ்க்கை

*12. எட்டு (பிரித்துச் சரியாக எழுதுக)*

அ. எட் +டு ஆ. எ+இட்டு இ. எள்+து ஈ. எட்ட் + டு

*13. பலகை (பிரித்துச்சரியாக எழுதுக)*

அ. பல + கை ஆ, பல் + அகை

இ. பல+க்+கை ஈ. இவை மூன்றும் அல்ல

*14. பகுப்பதம் (எழுதுக)*

அ. படித்தான் ஆ,படி இ. பாடி ஈ. பிடி

*15. பகாப்பதம் (எழுதுக)*

அ, கண்ணன் ஆ. கண் இ. கண் துஞ்சாமை ஈ.கண்ணிமை

*16. காலம் (பன்மையாக்குக)*

அ. கலம் ஆ. காலம் இ. காலங்கள் ஈ. காலம்

*17. பாடு (தொழிற்பெயராக்குக)*

அ. பாடினான் ஆ.பாடி இ. பாடிய ஈ. பாடுதல்

## IV. இலக்கணக் குறிப்பு தருக.

1. பாடிய

அ. வினையாலணையும் பெயர் ஆ. வினைமுற்று

இ. வினையெச்சம் ஈ. தொழிற்பெயர்

2. போற்றுவார்

அ. தொழிற்பெயர் ஆ. விளி

இ. வினையாலணையும் பெயர் ஈ. வினைமுற்று

3. பைந்தமிழ்

அ வினைத்தொகை ஆ. பண்புத்தொகை

இ. உரிச்சொல் ஈ. வினைமுற்று

4. உண்பதூஉம்

அ. இன்னிசை அளபெடை ஆ. இசைநிறை அளபெடை

இ.சொல்லிசை அளபெடை ஈ. உயிரளபெடை

5. வாழ்க

அ. வியங்கோள் வினைமுற்று ஆ. வினையெச்சம்

இ. வினையாலணையும் பெயர் ஈ. தொழிற்பெயர்

6. பறவை

அ. விகுதி பெற்ற தொழிற்பெயர் ஆ. வினைமுற்று

இ. பெயரெச்சம் ஈ. வினையெச்சம்

7. உண்ணல்

அ. வினைத்தொகை ஆ. பண்புத்தொகை
இ. தொழிற்பெயர் ஈ. உரிச்சொல்

8, அவள் உரைத்தாள்

அ. இன்னிசை அளபெடை ஆ. முதனிலைத் தொழிற்பெயர்
இ. பண்புத்தொகை ஈ. பெயரெச்சம்

9. கொல்லாமை

அ. தொழிற்பெயர் ஆ. வினையாலணையும் பெயர்
இ. எதிர்மறைத் தொழிற்பெயர் ஈ. முதனிலைத் தொழிற்பெயர்

10. ஓஒதல்.

அ. இன்னிசை அளபெடை ஆ. இசைநிறை அளபெடை
இ. சொல்லிசை அளபெடை ஈ. ஒற்றளபெடை

11. பேரரசே.

அ. விளித்தொடர் ஆ. எழுவாய்த்தொடர்
இ. உரிச்சொல் தொடர் ஈ. பெயரெச்சத்தொடர்

12. செந்தமிழ்.

அ. உவமைத்தொகை ஆ. உம்மைத்தொகை
இ. பண்புத்தொகை ஈ. வினைத்தொகை

13. உரனசைஇ.

அ. இசைநிறை அளபெடை ஆ. செய்யுளிசை அளபெடை
இ. சொல்லிசை அளபெடை ஈ. ஒற்றளபெடை

14. வெஃகுவார்க்கில்லை.

அ. செய்யுளிசை அளபெடை ஆ. இன்னிசை அளபெடை
இ. ஒற்றளபெடை ஈ. சொல்லிசை அளபெடை

15. பலகை.

அ. தனிமொழி ஆ. பொதுமொழி இ. தொடர் மொழி ஈ. எதுவுமில்லை

16. மாடு புல் தின்றது.

அ. தொடர்மொழி ஆ. பொதுமொழி இ. தனிமொழி ஈ. எதுவுமில்லை

17. அந்தமான்

அ. தனிமொழி ஆ. பொதுமொழி இ. தொடர்மொழி ஈ. பகுதி

18. எங்கிறைவன்

அ. ஆய்தம் ஆ. ஒற்றளபெடை
இ. உயிரளபெடை ஈ. ஆய்தக்குறுக்கம்

19. வெட்டு

அ. முதனிலைத் தொழிற்பெயர் ஆ. முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்
இ. விகுதி பெற்ற தொழிற்பெயர் ஈ. எதுவுமில்லை

Next Generation School